2010 ஏப்ரல் 15]

100—

உற்பத்தி நிலையம்

வினா எண் 106167—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, செங்கல்பட்டு நகரில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய தோல் பொருட்கள் உற்பத்தி நிலையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:

(அ) செங்கல்பட்டு நகரில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய தோல் பொருட்கள் உற்பத்தி நிலையம் துவக்க தற்போது வாரியத்தில் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. விதி 110-ன்கீழ் அறிக்கை

குடிநீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிக்க அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்த மாண்புமிகு துணை முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-ன்கீழ் ஓர் அறிக்கையை அளிக்கவேண்டுமென்று மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகின்றது. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) விதி 110-ன்கீழ் அறிக்கையை அளித்து முடித்துவிடட்டும், உட்காருங்கள். (குறுக்கீடு) விதி 110-ன்கீழ் அறிக்கையை அளித்து முடித்துவிடட்டும்,

உட்காருங்கள். (குறுக்கீடு) விதி 110-ன்கீழ் அறிக்கை அளித்தவுடன் எடுத்துக்கொள்கிறேன் என்று சொல்கிறேன் இல்லையா? உட்காருங்கள். (குறுக்கீடு) விதி 110-ன்கீழ் அறிக்கையை எப்போது வேண்டுமானாலும் அளிக்கலாம், உட்காருங்கள். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு பேரவை விதி 110-ன்கீழ் ஓர் அறிக்கையைப் படித்தளிக்க விரும்புகிறேன். தமிழ்நாட்டில் 2009 ஆம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் மாதம் வரை இயல்பான மழை அளவான 990.1 மி.மீ. மழைக்குப் பதிலாக சராசரியாக இரண்டு சதவிகிதம் அதிகமாக—அதாவது 1010.4 மி.மீ. மழை பெய்துள்ளது. இருப்பினும், ஒருசில மாவட்டங்களில் பெய்த மழையின் அளவு குறைவாக உள்ளது. 2010 ஆம் ஆண்டிலும் ஜனவரி முதல் இதுவரை தமிழ்நாட்டில் பெய்ய வேண்டிய மழை, இயல்பான மழை அளவைவிடக் குறைவாகவே பெய்துள்ளது. கடுமையான கோடை வெயில் காரணமாக ஒருசில மாவட்டங்களில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அரசுக்குத் தெரிவித்துள்ளார்கள்.

எனவே, அதுபற்றி ஆய்வு செய்வதற்காக 14-4-2010 அன்று காலையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நானும், தலைமைச் செயலாளர், நிதித் துறை முதன்மைச் செயலாளர், வருவாய்த் துறைச் செயலாளர் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்துகொள்ளக்கூடிய வகையில் ஒரு சிறப்புக் கூட்டம் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில் தமிழ்நாட்டில் நிலவி வரும் குடிநீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிக்கும்பொருட்டு, பின்வரும் எட்டு மாவட்டங்களுக்கு முதற்கட்டமாக மொத்தம் ரூபாய் 14 கோடி நிதியை பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்கலாம் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

விருதுநகர் மாவட்டம் - இரண்டு கோடி ரூபாய்; திருவள்ளூர் மாவட்டம் - ஒரு கோடி ரூபாய்; தருமபுரி மாவட்டம் - இரண்டு கோடி ரூபாய்; சேலம் மாவட்டம் - இரண்டு கோடி ரூபாய்; விழுப்புரம் மாவட்டம் - ஒரு கோடி ரூபாய்; கிருஷ்ணகிரி மாவட்டம் - இரண்டு கோடி ரூபாய்; வேலூர் மாவட்டம் - இரண்டு கோடி ரூபாய் மற்றும் திருவண்ணாமலை மாவட்டம் - இரண்டு கோடி ரூபாய்.

2010 ஏப்ரல் 15] [திரு. மு.க. ஸ்டாலின்]

முற்பகல் 10-45

இந்த நிதியைக் கொண்டு குடிநீர்த் தட்டுப்பாடு நிலவும் பகுதிகளில் புதிய ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல், லாரிகள்மூலம் குடிநீர் வழங்குதல், தூர் வாரி கிணறுகளை ஆழப்படுத்துதல், பம்பு செட்டுகளைப் பழுதுபார்த்தல் முதலிய பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்படும். இது தவிர, திண்டுக்கல் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் நிலவி வரும் குடிநீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிப்பதற்காக இந்த இரண்டு மாவட்டங்களுக்கும் தலா இரண்டு கோடி ரூபாய் வீதம், மொத்தம் நான்கு கோடி ரூபாய் நிதி 12-04-2010 அன்று ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதனையும் சேர்த்து 10 மாவட்டங்களுக்கு மொத்தம் ரூபாய் 18 கோடி பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். குடிநீர்த் தட்டுப்பாடு தொடர்பாக பிற மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து பெறப்படும் அறிக்கைகளும் பரிசீலிக்கப்பட்டு தேவையான நிதி உதவி வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

3. தகவல் கோரல்

(அ) உறுப்பினர் திரு. வி.பி. கலைராஜனை அவையில் 13-4-2010 அன்று சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவதூறாகப் பேசியதாகத் தெரிவித்து அளிக்கப்பட்ட முன்னறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 13-04-2010 அன்று நம்முடைய சட்டப் பேரவையில் சட்டத் துறை மானியக் கோரிக்கை விவாதத்திற்கு மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கின்றபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. கலைராஜன் அவர்களை மிகவும் அவதூறாகவும், கொச்சைப்படுத்துகின்ற வகையிலும்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் காலையில்தான் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS